2018 ஜுன் 29] [திரு. சி.வி. சண்முகம்]

அறநிலையத் துறை அதிகாரிகளைத் தடுப்பதற்கு அவருக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. ஆனால், அவருடைய விசாரணையில் நீங்கள் தலையிடக் கூடாது, விசாரணையின் முடிவை நீங்கள் கேட்கலாம். திரு. பொன். மாணிக்கவேல் விசாரணையின் case diary-*ஐ எல்லாம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அதையெல்லாம் நீங்கள் கேட்கக் கூடாது, விசாரணையின் முடிவு என்ன என்பதை நீங்கள் கேட்கலாம். விசாரணைக்கு நீங்கள் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று சொன்னாரே தவிர, காவல் துறையின்மீது எந்தவிதமான குற்றச்சாட்டையும் நீதிமன்றம் தெரிவிக்கவில்லை என்பதுதான் உண்மை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, போதும் விடுங்கள். அவ்வளவுதான்.*

(ஆ) 'புதிய கல்வித் திட்டத்தில் ஆண்டுகளைக் குறிப்பிட பொது ஆண்டுக்குப் பின், பொது ஆண்டுக்கு முன்' என்று குறிப்பிட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, என்னவென்று சொல்லுங்கள்?*

***திரு. ஐ.எஸ். இன்பதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பொதுவாக, வரலாற்றில் நாம் ஆண்டுகளை 'கி.மு.' மற்றும் 'கி.பி.' என்று குறிப்பிடுவது வழக்கம். இப்போது நம்முடைய கல்வித் துறையில், புதிய கல்வித் திட்டத்தில், புதிய பாடப் புத்தகத்தில், 'பொது ஆண்டுக்குப் பின், பொது ஆண்டுக்கு முன்' என்று குறிப்பிடப்பட்டிருப்பதாக தகவல்கள் வந்திருக்கின்றன. அவ்வாறு குறிப்பிட்டால், அது வரலாற்றுப் பிழையாக அமைந்துவிடும் என்பதனால், அதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்? அதைத்தானே? இல்லை வேறு ஏதாவது சொல்லப்போகிறீர்களா?*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு* point-*தான். சமயச்சார்பின்மையைக் கடைப்பிடிக்கின்ற வகையில், பள்ளிப் பாடத் திட்டத்திலே 'கி.மு., கி.பி.' என்ற பயன்பாடு நடைமுறையில் இருந்தது. மதச் சார்பின்மை, கல்வித் துறையில் முன்மாதிரியாக இருக்க வேண்டிய அரசு,*

இப்போது மாற்றத்தைச் செய்திருக்கிறது. ‘பொது ஆண்டுக்கு முன், பொது ஆண்டுக்கு பின்’ என மாற்றியிருப்பது தவறு. இது மக்கள் மத்தியில் மிகப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. வேதனை அளித்திருக்கிறது. குறிப்பாக, சிறுபான்மையின மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்டவர் அல்ல, நிச்சயமாக நல்ல நடவடிக்கைகளை எடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே, இப்பிரச்சினையை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அரசு என்றைக்குமே சிறுபான்மையின மக்களைப் பாதுகாக்கின்ற அரசு என்பதை நீங்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசைப் பொறுத்தவரையில் ‘கி.மு., கி.பி.’ என்ற நிலைதான் நீடிக்குமே தவிர வேறு ஒன்றும் நீடிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)*

5. கவன ஈர்ப்பு

(அ) பல்லாவரம் தொகுதி, கீழ்கட்டளையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கான இடத்தினை அங்கு வசிப்பவர்களுக்கு வரன்முறை செய்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “பல்லாவரம் தொகுதி, கீழ்கட்டளையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் வசிப்பவர்களுக்கு நிரந்தர வரன்முறை செய்துதர அங்கீகாரம் அளிப்பது” குறித்த அவசரப் பொது முக்கிறத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*